பக்கங்கள்:-18

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆவணி 29 | சனிக்கிழமை | 16.09.2023 | அதிர்வு 46

## யானை தாக்கி மாணவன் பலி

யானை தாக்கி பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பரிதாப சம்பவம் பனாமுர பிரதேசத்தில் நேற்று இடம்

03

# ‘சனல் 4’ முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உண்மையைத் தெளிவுபடுத்துமாம் விசாரணைக் குழு



## இப்படி நம்புகின்றார் பிள்ளையான்

– ஏ.ஜே.சார்ள்ஸ் –

“ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் “சனல் 4” முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்கள், மக்கள் மத்தியில் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்துகின்ற படியால் அது தொடர்பில் விசாரித்து உண்மையைத் தெளிவுபடுத்த வேண்டிய கடமை ஜனாதிபதிக்கு உண்டு. அந்தக் கடமையைச் செய்யவே விசாரணை ஆணைக்குழுவை ஜனாதிபதி நியமித்துள்ளார். எனவே, இந்த ஜனாதிபதி விசாரணை

02

# மீண்டும் அரசியலுக்கா? இப்போது முடிவில்லை!

**கோட்டா சொல்கின்றார்; விசாரணைக் குழு முன்பாக வாக்குமூலம் வழங்கத் தயார் எனவும் அவர் அறிவிப்பு**



- சுடர் திலீபன் -

“நான் மீண்டும் அரசியலுக்கு வருவேனா? இல்லையா? என்பது தொடர்பில் இப்போதைக்குப் பதில் கூற முடியாது. என் மீள் அரசியல் பிரவேசம் சிலருக்குச் சவாலாக இருக்கக்கூடும் என்பதால் பல்வேறு விதமான வதந்திகள் தற்போது வெளியாகின்றன.”

03

# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வாய்வு தற்காலிக இடைநிறுத்தம்!

**இதுவரை 17 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முழுமையாக மீட்பு**



– முல்லைத்தீவு நிருபர் –

முல்லைத்தீவு – கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வாய்வுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அகழ்வாய்வுப் பணிகளை

05

## பயணப் பொதியில் இருந்து ஆணொருவரின் சடலம் மீட்பு

சீதுவையில் பயணப் பொதியொன்றில் இருந்து ஆணொருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சீதுவை – தண்டுகம் ஓயாவுக்கு அருகில் இருந்து பயணப் பொதி கண்டெடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## இரகசியம்



தமிழரசுக் கட்சியின் பிரமுகர் ஒருவரை நல்லூர் ஆலயச் சுற்றாடலில் கண்டேன்.

“மோடியைச் சந்திக்க ஒன்றாக முயல்வோம், வாருங்கள்! என்று நீதியரசர் விக்னேஸ்வரன் அழைப்பு விடுத்திருக்கின்றாரே..?” – என்றேன்.

அவர் சிரித்தார்.

03

# சர்வதேச மட்டத்திலான நிபுணர்களின் ஒத்துழைப்புடன் விசாரணை அவசியம்

## ‘சனல் - 4’ வீடியோ தொடர்பில் அரசிடம் முன்னாள் சபாநாயகர் கரு கோரிக்கை



“உயிர்த்த ஞாயிறு தினப் பயங்கரவாதத் தாக்குதலைப் பின்னணி யாகக் கொண்டு “சனல் 4“ அலைவரிசை ஒளிபரப்பி இருக்கும் விடயங்கள் தொடர்பில் உண்மையை அறிந்துகொள்ளும் பூரண உரிமை இந்த நாட்டு மக்களுக்கு இருக்கின்றது. அதனால் அது தொடர்பான விசாரணைகளைத் தாமதிக்காமல் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான நிபுணர்களின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ள வேண்டும் என அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.”

– இவ்வாறு சமூக நீதிக்கான தேசிய அமைப்பின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பாக “சனல் 4” அலைவரிசையில் ஒளிபரப்பப்பட்டிருந்த விடயங்கள் ஊடாக வெளிப்படுத்தி இருக்கும் விடயங்கள் முறையான விசாரணை இல்லாமல் ஒருபோதும் ஒதுக்கிவிட முடியுமான விடயங்கள் அல்ல.

அதனால் இதன் மூலம் வெளிப்பட்டிருக்கும் விடயங்கள் தொடர்பாக சரியான ஆய்வொன்றை மேற்கொண்டு, பொறுப்புக்கூற வேண்டியவர்களுக்கு எதிராக முறையான நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

அவ்வாறு நடவடிக்கை எடுக்காவிட்டால் அது இலங்கையின் எதிர்காலத்துக்கு மிகவும் மோசமான அழுத்தங்களை ஏற்படுத்தலாம் என்பது எமது நிலைப்பாடாகும்.

நாடு என்ற ரீதியில் பார்க்கும்போது அது இந்த நாட்டின் இனம் மற்றும் தேசிய நல்லிணக்கத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் பெறுபேற்றை வழங்க முடியும் என்பதுடன் சர்வதேச ரீதியில் பார்க்கும்போது அவ்வாறானதொரு நிலை நாட்டின் நற்பெயருக்கும் பாதிப்பை ஏற்படுத்தும்.

உயிர்த் ஞாயிறு தினத் தாக்குதலுக்கு ஏற்புடையதாகக் கவனத்தில்கொள்ளப்பட்ட சில விடயங்கள் தொடர்பாக இதற்கு முன்னரான சந்தர்ப்பங்களிலும் ஜனாதிபதி விசேட ஆணைக்குழு ஒன்றின் ஊடாகவும், நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஊடாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. “சனல் 4” வெளிப்படுத்தலின் பின்னரும் அது தொடர்பாகத் தேடிப்பார்க்க இரண்டு விசேட விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளதாக அரசு தெரிவித்திருக்கின்றது.

இதன்போது நாங்கள் கவனம் செலுத்துவது அவ்வாறு மேற்கொள்ளப்படும் எவ்வாறானதாரு விசாரணையிலும் குற்ற விசாரணை தொடர்பான நிபுணத்துவமுடைய மற்றும் அது தொடர்பான அனுபவம் உள்ள விசேட குழுவொன்றின் பங்கேற்பு இருக்க வேண்டும்.

அத்துடன் அதன் விசாரணைகளின் முன்னேற்றத்தின் அடிப்படையில் அதற்குப் பொறுப்புக்கூற வேண்டிய எந்தத் தராதரங்களில் இருப்பவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக சட்ட ரீதியிலான நடவடிக்கை எடுப்பதற்கு முடியுமான நிலைமை அந்த விசாரணைக் குழுவுக்கு இருக்க வேண்டும்.

இதற்கு மேலதிகமாக இதன்போது கவனம் செலுத்தப்பட வேண்டிய முக்கிய விடயங்களாக, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் இடம்பெற்றதுடன் இந்த நாட்டில் முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக பாரிய சமூக கருத்தாடல் ஒன்றை கட்டியெழுப்புவதற்காக சில குழுக்கள் மேற்கொண்ட பிரசாரங்கள் தொடர்பாகவும் இதன்போது கவனத்தில்கொள்ள வேண்டும்.

மலட்டு மருந்து, மலட்டுக் கொத்துராட்டி மற்றும் மலட்டு சத்திர சிகிச்சை போன்ற வகையில் பல்வேறு பரிமாணங்கள் ஊடாக வெறுப்பை ஊக்குவிக்க நடவடிக்கை எடுத்தவர்கள் தொடர்பாகவும், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுடன் ஏற்பட்ட அமைதியற்ற நிலைமைகள் மூலம் பல்வேறு கொடூரமான செயற்பாடுகளுக்கு நேரடியாக சம்பந்தப்பட்டிருப்பதாகச் சாட்சிகள் இருக்கும் சில அரசியல்வாதிகளுக்கு எதிராகவும் இதன்போது கவனம் செலுத்த வேண்டியிருக்கின்றது.”

– என்றுள்ளது.

## ‘சனல் 4’ முன்வைத்த...

ஆணைக்குழு உண்மையைத் தெளிவு–படுத்தும் என்று நான் நம்புகின்றேன்.”

– இவ்வாறு இராஜாங்க அமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவருமான பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான “சனல் 4” தொலைக்காட்சியின் குற்றச்சாட்டுக்களை விசாரிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குழுவை நியமித்துள்ளார். விசாரணைக்குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் எஸ்.ஐ.இமாம் நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன் ஓய்வுபெற்ற விமானப்படைத் தளபதி ஏ.சீ.எம்.ஜயலத் வீரக்கொடி மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி ஹர்ச ஏ.ஜே.சோசா ஆகியோர் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், “சனல் 4” தொலைக்காட்சியின் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியிருக்கும் ஒருவரான இராஜாங்க அமைச்சர் பிள்ளையான், ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு தொடர்பில் கருத்துரைக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

“ஆஸாத் மௌலானா என்ற நபர், இலங்கையில் ஈஸ்டர் தாக்குதலை மேற்கொண்ட முஸ்லிம் சமூகத்தைப் பாதுகாப்பதற்கும், தான் வெளிநாட்டில் தஞ்சம் அடைவதற்குமே போலியான குற்றச்சாட்டுக்களைமுன்வைத்து“சனல்4” தொலைக்காட்சிக்கு நேர்காணல் வழங்கியுள்ளார். இதை ஊதிப்பெருக்க வேண்டிய அவசியம் இல்லை.

ஐ.எஸ். என்றால் என்ன? அந்தத் தீவிரவாத அமைப்பினர் ஏன் குண்டுத் தாக்குதல்களை நடத்தினர்? என்பதை சாதாரண அறிவு உள்ளவர்களே புரிந்துகொள்ள முடியும். எனினும், மக்கள் சிலர் தெளிவு இல்லாமல் இருக்கின்றார்கள். அவர்களுக்கு ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு உண்மையைத் தெளிவுபடுத்தும் என்று நான் நம்புகின்றேன்.

நான் சிறையில் இருக்கும்போதே ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்த குழுக்களிடம் சென்று வாக்குமூலம் வழங்கியுள்ளேன். எனவே, “சனல் 4” முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உண்மையைத் தெளிவுபடுத்த ஜனாதிபதி நியமித்துள்ள விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் வாக்குமூலம் வழங்க நான் தயங்கமாட்டேன்.” – என்றார்.



## யானை தாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பெற்றுள்ளது.

பனாமுர – காவன்திஸ்ஸ ரஜமஹா விகாரையில் நேற்று நடைபெறவிருந்த பெரஹரவுக்காக அழைத்து வரப்பட்ட யானையொன்று கட்டி வைக்கப்பட்டிருந்த இடத்துக்குச் சென்றபோதே இந்தப் பாடசாலை மாணவன் தாக்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த அந்த மாணவன் எம்பிலிப்பிட்டிய வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

எம்பிலிப்பிட்டிய, கல்ஹமுன பிரதேசத்தில் வசிக்கும் 12 வயதுடைய பாடசாலை மாணவனே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் யானைக்குப் பொறுப்பான யானை பாகன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பனாமுர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மீண்டும் அரசியலு...

– இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

கோட்டாபய ராஜபக்ஷ மீண்டும் அரசியலுக்கு வரவுள்ளார் எனவும், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அவர் வேட்பாளராகக் களமிறங்கவுள்ளார் எனவும் செய்திகள் வெளிவந்திருந்தன. இது தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"என் மீள் அரசியல் பயணத்தைப் பற்றி நான்தான் முடிவெடுக்க முடியும். அதில் வேறு எவரும் தலையிட முடியாது.

நான் நாட்டை விட்டு ஓடவில்லை அரசியலுக்குப் பிரியாவிடை வழங்கவும் இல்லை. தற்போது ஓய்வில்தான் இருக்கின்றேன். நாட்டில் நடக்கும் விடயங்களை நாள்தோறும் அவதானித்து வருகின்றேன்." – என்றார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான "சனல் 4" தொலைக்காட்சியின் குற்றச்சாட்டுக்களை விசாரிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ள ஆணைக்குழு தொடர்பில் அவர் கருத்துரைக்கையில்,

"என் மீதான போலிக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் எந்த விசாரணைக் குழு முன்னிலையிலும் வாக்குமூலம் வழங்கத் தயாராகவுள்ளேன். எனவே, ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு என்னை அழைத்தால் அந்த ஆணைக்குழு முன்னிலையிலும் நான் வாக்குமூலம் வழங்குவேன். என் மீது போலிக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து உண்மைகளை மறைக்க முடியாது. உண்மைகள் வெளிவர வேண்டுமெனில் நான் வாக்குமூலம் வழங்கியே தீர வேண்டும்." – என்றார்.

## இரகசியம் பரகசியம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"ஆள் மாறி இருக்கின்றது. அவ்வளவுதான்!" – என்று பதில் வந்தது.

எனக்கு விளங்கவில்லை. "என்ன கூறுகின்றீர்கள்?" – என்று திரும்பிக் கேட்டேன்.

"இல்லை. அந்தப் பக்கத்தில் இதுவரை காலமும் இப்படி அழைப்பாளர் போல வேலை பார்ப்பவர் ரெலோவின் குருசாமி சுரேந்திரன்தான். அது இப்போது விஸ்வலிங்கம் விக்னேஸ்வரனாகி விட்டது. அவ்வளவுதான் மாற்றம். வேறு ஒன்றும் இதில் இல்லை!" – என்று பிடி கொடுக்காமல் கூறி விட்டு நழுவி விட்டார் அவர். கூட்ட நெரிசல். அதனால் ஆளை இழுத்துப் பிடித்து, நிறுத்தி வைத்து, தொடர்ந்து நோண்ட முடியவில்லை. விட்டுவிட்டேன்.

விக்னேஸ்வரனின் இந்த அழைப்புத் தொடர்பாக அவருடன் சேர்ந்து செயற்பட ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் அங்கத்துவக் கட்சிகளான புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ்., சிறிகாந்தாவின் தமிழ்த் தேசியக் கட்சி எல்லாம் தயார். ஆனால் ஒரே ஒரு ரிசர்வேஷன். அது – தங்கள் கூட்டில் உள்ள ஜனநாயகப் போராளிகள் கட்சிக்கு அந்த அழைப்பை விக்னேஸ்வரன் விடவில்லை, அந்த அமைப்பையும் விக்னேஸ்வரன் அழைக்க வேண்டும் என்று அக்கட்சிகள் எதிர்பார்க்கின்றன. சில சமயங்களில் இக்கூட்டு முயற்சியில் ஈடுபட இதனை ஒரு நிபந்தனையாகவும் அக்கட்சிகள் விதிக்கவும் கூடும்.

ஆனால், அதை ஏற்று அவர்களையும் – ஜனநாயகப் போராளிகள் கட்சியையும் – அழைப்பதற்கு விக்னேஸ்வரன் இணங்குவாரா என்பது தெரியவில்லை. ஏற்கனவே ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணி என்ற கட்டமைப்பை உருவாக்கும் ஆரம்பக் கூட்டங்களில் – இவ்வாண்டு முற்பகுதியில் – விக்னேஸ்வரன் கலந்து கொண்டார். அச்சமயங்களில் ஆரம்பத்தில் ஜனநாயகப் போராளிகள் கட்சியை கூட்டுக்குள் உள்வாங்குவதை வெளிப்படையாக எதிர்த்தவர் விக்னேஸ்வரன். பின்னர் அந்தக் கூட்டில் இடம் பெறாமலேயே விக்னேஸ்வரனும் அவரது அணியின் மணிவண்ணனும் வெளியே நியமை வேறு விடயங்கள்.

இப்போது அதே ஜனநாயகப் போராளிகள் கட்சியையும் சேர்த்துப் பிரதமர் மோடியைச் சந்திக்கும் முயற்சியில் ஈடுபட விக்னேஸ்வரன் இணங்குவாரா என்பது தெரியவில்லை.

விக்னேஸ்வரனின் அழைப்புத் தொடர்பாக தமிழரசுக் கட்சியின் நிலை என்ன என்பதை அறிய முயன்றேன். சுமந்திரன் அமெரிக்காவில். சம்பந்தன் இவ்விடயம் குறித்து யாருடனும் பேசும் நிலையில் இல்லை. மாவையரின் கருத்து தெரியவில்லை. ஆனால், கட்சி உள் வட்டாரங்களில் ஒரு தகவல் கிடைத்தது. தமிழரசுக் கட்சியின் அரசியல் பீட உறுப்பினர்களுக்கான 'வட்ஸ் அப்' குழுமத்தில் கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் இது தொடர்பில் ஒரு செய்திக் குறிப்பைப் பதிந்திருக்கிறார் என அந்தக் குழுமத் தொடர்பில் இருந்த வட்டாரம் ஒன்று தெரிவித்தது. அந்தச் செய்தியின் முழு வடிவமும் எனக்குக் கிடைக்கவில்லை. ஆனால் உள் வீட்டு வட்டாரங்கள் தெரிவித்த தகவலின் அடிப்படையில் அதில் இருந்த விடயங்களின் சாராம்சம் இதுதான்:–

"நீதியரசர் விக்னேஸ்வரன்தான் இப்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நெருங்கிய – நம்பிக்கைக்குரிய – ஆளாயிற்றே...! பிரதமர் மோடியுடன் பேசுவதிலும் பார்க்க, அவரே நேரடியாக ரணிலுடன் பேசி, இந்த விடயங்களுக்குத் தீர்வு பெற எத்தனிகலாமே...? அடுத்தது – எல்லாக் கட்சிகளும் சேர்ந்து ஏற்கனவே பல தடவைகள் பிரதமர் மோடிக்குக் கடிதம் எழுதியாயிற்றே.... இனி ஏன் புதிதாக ஒரு கடிதம் கூட்டாகத் தயார் பண்ண வேண்டும்? தேவையானால் பழைய கடிதங்களைக் குறிப்பிட்டு ஒரு நினைவூட்டல் அனுப்பலாம். அதற்காக எதற்குப் புதிய கடிதம் தயார் பண்ணும் ஏற்பாடுகள்? எது, எப்படி என்றாலும், கட்சியின் அரசியல் குழுவைக் கூட்டி ஆராயாமல், இது விடயத்தில் ஒரு முடிவும் எடுக்கக் கூடாது.." என்ற சாரப்பட ஒரு போடு போட்டிருக்கின்றார் சிவஞானம்.

சிவஞானம் – விக்னேஸ்வரன் இழுபறி உறவு வடக்கு மாகாண சபையோடு ஆரம்பித்த பிணக்கு. அது தீரும் வாய்ப்பு இல்லவே இல்லை என்றுதான் நான் நினைக்கிறேன்.

விக்கினேஸ்வரனின் அழைப்புத் தொடர்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையினான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாடு தெரியவரவில்லை. சிலசமயங்களில் நீதியரசர் விக்னேஸ்வரனின் இந்த அழைப்பை கஜேந்திரகுமார் பொருட்படுத்தாமல் கூட விட்டிருக்கக் கூடும். யாரறிவார்?



### சாய்ந்தமருதுக் கூட்டம் இன்று திட்டமிட்டபடி நடக்கும்

# நான் தொடைநடுங்கி அல்லன் சலசலப்புகளுக்கு அஞ்சேன்!

## ரவூப் ஹக்கீம் சூளுரை







(ஏ.எல்.எம்.)

"தொடை நடுங்கியாக நான் ஒரு போதும் செயற்பட மாட்டேன். சிறு சிறு சலசலப்புகளுக்கு அஞ்சுபவன் நான் அல்லன். திட்டமிட்டபடி இன்று எனது மாபெரும் தலைவன் மர்ஹூம் அஷ்ரப்பின் 23 ஆவது நினைவேந்தல் சாய்ந்தமருதில் நடந்தே தீரும்." - இவ்வாறு சூளுரைத்தார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம்.

நேற்று மாலை நிந்தவூர் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட மத்திய குழுக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

கல்முனை மாநகர சபையின் முன்னாள் மேயர் சட்டத்தரணி ஏ எம் ரஹீப் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களில் இருந்தும் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் ஹக்கீம் கூறியவை வருமாறு:-

நாளை (இன்று சனிக்கிழமை) மாலை சாய்ந்தமருதில் நடைபெறவிருக்கும் தலைவர் அஷ்ரபின் நினைவஞ்சலி நிகழ்வில் எவ்வித அசம்பாவிதங்களும் இடம்பெறாதவாறு, அது சுமுகமாக - சிறப்பாக - நடைபெறுவதற்கு தனிப்பட்ட ரீதியில் நானே பொறுப்பேற்கின்றேன். இது முஸ்லிம் காங்கிரஸின் எழுச்சியையும் இப்பேரியக்கத்தின் வலிமையையும் காட்டுவதற்கான ஒரு சந்தர்ப்பமாகும். சிறு சிறு பூச்சாண்டிகளுக்கு பயந்து ஓடுபவர்கள் முஸ்லிம் காங்கிரஸ்காரர்கள் அல்லர். இன்று நடைபெற இருக்கும் நினைவேந்தல் நிகழ்வு சாய்ந்தமருது மைதானத்தில் திட்டமிட்டபடி எமது போராளிகள் பெரும் எண்ணிக்கையானோரின் பங்களிப்புடன் நடந்தே தீரும் என்பதை இந்த சிறு குள்ளநரிக் கூட்டங்களுக்குச் சொல்லி வைக்க விரும்புகிறேன். இந்தச் சில்லறை விளையாட்டுகள் குறித்து எவரும் கவலைப்படத் தேவையில்லை. பயப்படவும் தேவையுமில்லை. - என்றார்.

முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் சிரேஷ்ட சட்டத்தரணி நிஸாம் காரியப்பர், மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா மற்றும் முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினர்கள் பலரும் நேற்றைய கூட்டத்தில் கலந்து கொண்டனர். .

இந்த நினைவேந்தல் நிகழ்வை சாய்ந்தமருதில் நடத்தக் கூடாது எனவும், தலைவர் ஹக்கீம் சாய்ந்தமருதில் கால் வைக்கக் கூடாது எனவும் கூறி நேற்று வெள்ளிக்கிழமை ஜும்மா தொழுகையின் பின்னர் ஆர்ப்பாட்டம் ஒன்று சாய்ந்தமருது ஜும்மா பள்ளிவாசலுக்கு முன்னால் இடம்பெற்றதும், அதில் தலைவர் ஹக்கீமின் கொடும்பாவி எரிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கவை.

அதையொட்டியே இன்றைய நினைவேந்தல் தமது பங்களிப்புடன் திட்டமிட்டபடி நடந்தே தீரும் என சூளுரைத்திருக்கின்றார் மு.கா. தலைவர் ஹக்கீம்.



# பிடியாணை பிறப்பிக்கப்பட்டவரை பிடிப்பதற்கு சென்ற இன்ஸ்பெக்டரை நாய் பதம் பார்த்தது!

நாவுல பொபெல்ல பிரதேசத்தில் வசிக்கும் – நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட – ஒருவரைக் கைது செய்ய சென்ற நாவுல பொலிஸ் குழுவினர் மீது வீட்டில் வளர்க்கப்பட்ட நாய் கடித்ததில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் இன்ஸ்பர்க்டர் சிகிச்சைக்காக தம்புள்ளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மாத்தளை நீதிவான் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட பிடியாணைக்கமைய, நாவுல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் பொலிஸ் குழுவொன்று நேற்று முன்தினம் வியாழக்கிழமை சந்தேக நபரின் வீட்டுக்குச் சென்ற போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில், சந்தேக நபரை பொலிஸார் பெரும் பிரயத்தனத்தின் பின்னர் கைது செய்துள்ளனர்.

# வைத்தியர்களின் சேவைக் காலத்தை 65 வயது வரை நீடிப்பதற்குத் தீர்மானம்

அரச சேவையில் உள்ள விசேட வைத்தியர்கள் மற்றும் வைத்தியசாலை வைத்தியர்களின் சேவைக் காலத்தை 65 வயது வரை நீடிப்பதற்கான அனுமதி வழங்குதல் குறித்து தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாட்டின் சுகாதார சேவையில் ஏற்பட்டுள்ள சிக்கல்களை குறைக்கும் முயற்சியில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் விரைவில் சமர்ப்பிக்கப்படும் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

பொதுத்துறை ஊழியர்களின் ஒப்பந்த அடிப்படையில் ஓய்வு வயது 60 ஆகும். இருப்பினும் புதிய பிரேரணையின்படி நாட்டில் நிலவும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு 65 வயது வரை மருத்துவர்கள் சேவையில் இருக்க புதிய ஒப்பந்தத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடி காரணமாக வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறி வரும் நிலையில் சுகாதார சேவை வீழ்ச்சியடைவதை தடுக்க அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

## கொக்குத்தொடுவாய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒக்டோபர் மாத மூன்றாவது வாரத்தில் மீளவும் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது



என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனிதப் புதைகுழி அகழ்வாய்வில் ஈடுபட்டு வந்த தொல்லியல் பேராசிரி



யர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினர் ஏற்கனவே ஒதுக்கப்பட்ட வேறு பணிகளுக்குச் செல்லவிருப்பதால், இந்த மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் இவ்வாறு தற்காலிகமாக இடைநிறுத்



தப்பட்டுள்ளன என்று முல்லைத்தீவு சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா தெரிவித்தார்.

இந்நிலையில் இதுவரை ஒன்பது நாள்கள் இடம்பெற்ற அகழ்வாய்வுகளின் முடிவுகள் தொடர்பில் தாம் அறிக்கையைச் சமர்ப்பிக்கவுள்ளார் எனவும், அதன் பின்னர் அந்த அகழ்வாய்வுகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு முல்லைத்தீவு நீதிமன்றம் அனுமதி வழங்கினால் தாம் தொடர்ந்தும் அகழ்வாய்வுகளை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளார் எனவும் அகழ்வாய்வுகளில் ஈடுபட்ட தொல்லியல்துறை பேராசிரியர் ராஜ் சோமதேவ தெரிவித்தார்.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் அகழ்வாய்வுகள் ஒன்பதாவது நாளான நேற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் நீதிவான் கெங்காதரன் முன்னிலையில், சட்டத்தரணிகளான கே.எஸ். நிரஞ்சன், ரனித்தா ஞானராஜா, முல்லைத்தீவு சட்ட வைத்திய அதிகாரி கே.வாசுதேவா, யாழ்ப்பாணம் சட்ட வைத்திய அதிகாரி செ.பிரணவன், தொல்லியல் ஆய்வாளர் பரமு புஷ்பரட்ணம் ஆகியோரின் பங்கேற்புடன், தொல்லியல்துறைப் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரால் முன்னெடுக்கப்பட்டன.

நேற்றைய அகழ்வாய்வுகளில் மூன்று மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டமையுடன், தடயப் பொருளாக விடுதலைப் புலிகள் அமைப்பின் இலக்கத் தகடு ஒன்றும், ஆடைகளும் மீட்கப்பட்டுள்ளன. இவ்வாறு மீட்கப்பட்ட ஆடைகளில்



இலக்கங்கள் இடப்பட்டுள்ளன.

அந்தவகையில் இதுவரை ஒன்பது நாள்கள் இடம்பெற்ற அகழ்வாய்வுப் பணிகளின் நிறைவில் மொத்தமாக 17 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

நேற்று அகழ்வாய்வுகளின் நிறைவில், இந்த மனிதப் புதைகுழி ட்ரோன் கருவியைப் பயன்படுத்தி காணொளி எடுக்கப்பட்டதுடன், பிளாஸ்டிக் விரிப்புக் கொண்டு மூடப்பட்டது. அந்த விரிப்பின் விளிம்புப் பகுதிகளில் மண் இடப்பட்டுள்ளன.

முன்னாள் வடக்கு மாகாண சபை



உறுப்பினர் துரைராசா ரவிகரன், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கத்தின் முல்லைத்தீவு இணைப்பாளர் மரியசுரேஸ் ஈஸ்வரி ஆகியோர் மனிதப் புதைகுழி வளாகத்துக்கு நேற்று வருகை தந்திருந்தனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## குற்றம் எல்லாம் கோட்டா மீது

'செல்லும் செல்லாதது எல்லாம் செட்டி தலை மீது!' - என்பார்கள். அதுபோல தங்களுக்கு வந்த கெட்ட பெயரை எல்லாம் ஒரு தலை மீது சுமத்தி விட்டுத் தப்புவதற்கு எத்தனிகின்றனர் ஒட்டுமொத்த மொட்டுக் கட்சியினரும்.

சுதந்திர இலங்கையின் 75 வருட கால வரலாற்றில், ஸ்தாபித்து மிகக் குறுகிய காலத்தில் செல்வாக்கின் உச்சியைத் தொட்டு, ஓர் அதிசயத்தை நிகழ்த்திய மொட்டுக் கட்சி, மிகக் குறுகிய காலத்திலேயே அந்தச் செல்வாக்கைப் பறிகொடுத்து, மக்களின் ஆதரவுத் தளத்தையும் இழந்து, சரிவையும் எதிர்கொண்டு நிற்கின்றது.

2015 முற்பகுதியில் ராஜபக்ஷக்கள் ஆட்சி அதிகாரத்திலிருந்து துரத்தப்பட்ட போது, அவர்கள் மீண்டு வருவார்கள் என்று பலரும் நம்பவில்லை. ஆனால் அடுத்த ஐந்து வருடங்களுக்குள் அவர்கள் மீண்டெழுந்த சாதனை படைத்த அதிசயம் நடந்தது.

அவர்கள் அரசியலில் மீண்டெழுவதற்கான வாய்ப்பை - சந்தர்ப்பத்தை - தென்னிலங்கைச் சிங்கள மக்கள் ஒன்றுபட்டு வழங்கினார்கள். ஆனால் அவர்களின் அந்தத் தாராளத்தை மொட்டுக் கட்சியினர் போட்டடித்துச் செல்வாக்கை இழந்தனர்.

இப்போது திரும்பவும் தாங்கள் மீண்டெழுவததற்கு அவர்கள் பெரும் பிரயத்தனப்படுகிறார்கள்.

முன்னர் இவ்வாறு அரசியல் புனர்ஜென்மம் எடுப்பதற்கு மக்கள் தந்த வாய்ப்பை போட்டடித்துக் குழப்பியவர் கோட்டாபய ராஜபக்ஷவே என்று எல்லாக் குறை குற்றங்களையும் அவர் மீது சுமத்தி விட்டு, தாங்கள் தப்புவதற்கு மொட்டுக் கட்சியினர் முனைப்பாக முயலுகின்றனர் என்பது வெளிப்படையானது.

2005 நவம்பர் முதல் 2015 ஜனவரி வரை மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது பாதுகாப்பு செயலாளராக இருந்தவர் கோட்டாபய ராஜபக்ஷதான். அப்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நிறைவேற்றதிகாரங்களில் ஐம்பது வீதத்தைப் பிரயோகித்தவர் அவர் தம்பியாரான கோட்டாபய ராஜபக்ஷதான் என்று கூறுபவர்கள் உண்டு.

அச்சமயத்தில் எல்லாம் இப்போதைய மொட்டுக் கட்சிக்காரர்கள் அனைவரும் மஹிந்த ராஜபக்ஷவுடன்தான் ஓரணியிலிருந்தார்கள். அவர்களில் எவரும் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக அப்போதெல்லாம் வாயைத் திறப்பதில்லை. பேசுவதில்லை. அவர் சொல்பவை எல்லாவற்றிற்கும் தலையாட்டி அவரை ஏத்திக் கொண்டாடி நின்றனர்.

அப்போது ராஜபக்ஷக்கள் தமது பிடியில் வைத்திருந்த சுதந்திரக் கட்சி மூலம் அரசியல் செய்தவர்கள் மட்டுமல்லர், பின்னர் நல்லாட்சி காலத்தில் ராஜபக்ஷக்கள் எதிரணியில் இருந்த போது, கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்கும் இலக்குடன் 'வியத்மக', 'எலிய' போன்ற அமைப்புகள் மூலம் கோட்டாபயவை நெருங்கி, அவர் மூலம் அரசியலுக்குள் நுழைந்து, அதிகாரம் பெற்றவர்கள் கூட இப்போது தங்களின் சொந்த அரசியலுக்காக கோட்டாபய ராஜபக்ஷவைத் தூஷிக்கத் தயங்குகிறார்கள் இல்லை.

அவர் ஜனாதிபதியாக இருந்தபோது கண்ணை மூடிக்கொண்டு அவரைப் போற்றியவர்கள் எல்லோரும் இப்போது அவர் அதிகாரத்தில் இல்லாதமையால் தூற்றுகின்றார்கள்.

எல்லாப் பிழையையும் - பொருளாதாரச் சரிவு உட்பட அனைத்துச் சிக்கல்களுக்குமான பொறுப்புகள் யாவற்றையும் - கோட்டாபய ராஜபக்ஷ மீது சுமத்தி விட்டு, அதன் மூலம் தங்களைத் தூயவர்களாக்கப் பார்க்கின்றார்கள் மொட்டுக் கட்சியினர்.

கோட்டாபயவுக்கு எதிராக மொட்டுக் கட்சிக்குள் இன்று கிளம்பும் சத்தங்கள், ஆரவாரங்கள் எல்லாம் அவரவர் தங்களைப் பாப விமோசனம் செய்து, அரசியலில் மீண்டெழ கோட்டாபய தூஷிப்புச் செய்கிறார்கள். அவ்வளவுதான்.

## தொம்பேயில் இளம் பெண் மர்மமான முறையில் மரணம்

தொம்பே பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிரிதர சந்தி பகுதியில் உள்ள அறை ஒன்றில் இளம் பெண் ஒருவர் சந்தேகத்துக்கு இடமான முறையில் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் கிடைத்த தகவலின் அடிப்படையில் தொம்பே பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கிரிதர சந்திக்கு அருகாமையில் உள்ள அறை ஒன்றை வாடகைக்குப் பெற்ற நபர் ஒருவர் அதனை இளம் ஜோடி ஒன்றுக்கு நேற்று முன்தினம் தங்குவதற்கு வழங்கியுள்ளார்.

மறுநாள் சோதனையின் போது, அறையில் தங்கியிருந்த பெண் சந்தேகத்திற்கிடமான முறையில் இறந்து கிடந்தமையும், சம்பவத்தின் பின்னர் மற்றைய நபர் காணாமல் போனமையும் தெரியவந்தது.

சுமார் 30 வயதுடைய இளம் பெண்ணே உயிரிழந்துள்ளார். பெண்ணின் அடையாளம் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

சடலம் கம்பஹா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.


தொம்பே பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பாரிஸின் லா சப்பலில் திலீபனின் திருவுருவம்









தியாக தீபம் திலீபனின் 36 ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டு பிரான்ஸின் தலைநகர் பாரிஸின் 10 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள ஈழத் தமிழர்களின் குட்டி யாழ்ப்பாணம் எனப்படும் லா சப்பல் (la Chapelle) பகுதியில் 12 நாள்களுக்கும் தியாகதீபம் திலீபனின் திருவுருவப்படம் பாரிஸ் 10 ஆம் வட்டாரக் காவல்துறை மற்றும் நகரசபையின் அனுமதியுடன் வணக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ளது. இதனை பிரான்ஸைத் தளமாக இயங்கும் ç est les nous tamouls (சே நூ தமிழ்) என்று அமைப்பு முனெடுத்துச் செய்துவருகின்றது.

# விசுவமடுவில் தியாகி திலீபனின் நிலைவேந்தல் நிகழ்வு!

தியாக தீபம் திலீபனின் 36 ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று விசுவமடு, தேராவில் புதிய நிலா விளையாட்டு மைதானத்தில் உணர்வுபூர்வமாக ஆரம்பமாகியது.

தியாக தீபம் திலீபன் உண்ணா நோன்பை ஆரம்பித்த நேரமான காலை 9.45 மணிக்கு மாவீரர் ஒருவரின் தாயாரால் பொதுச்சுடரேற்றலுடன் இந்த நிகழ்வு ஆரம்பமானது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், முல்லைத்தீவு மாவட்ட சமூகச் செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு தியாகி திலீபனின் திருவுருவப் படத்துக்கு அஞ்சலி செலுத்தினர்.














# நல்லூரில் தியாக தீபத்துக்கு மணி அணியினரும் அஞ்சலி

(எஸ்.நிதர்ஷன்)

தியாக தீபம் திலீபனின் 36 ஆவது ஆண்டு நினைவேந்தலின் முதல் நாள் நிகழ்வில் தமிழ் மக்கள் கூட்டணியினரும் அஞ்சலி செலுத்தினர்.

யாழ். நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபன் நினைவாலயத்துக்கு நேற்று சென்ற முன்னாள் யாழ்ப்பாணம் மாநகர மேயர் வி.மணிவண்ணன் உள்ளிட்டவர்கள் தியாக தீபத்துக்கு சுடரேற்றி - மலர் தூபி அஞ்சலி செலுத்தினர்.










# திலீபனின் ஊர்தியை அக்கரைப்பற்றில் மறித்து சிங்கக் கொடியுடன் முஸ்லிம் குழு ஆர்ப்பாட்டம்









(கனகராசா சரவணன்)

தியாகதீபம் திலீபனின் 36 ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் யாழ்ப்பாணம் நோக்கி பொத்துவிலில் ஆரம்பிக்கப்பட்ட தீலிபனின் உருவப்படம் தாங்கிய வாகன ஊர்தி நேற்று வெள்ளிக்கிழமை மாலை அக்கரைப்பற்றுக்கு வந்த போது சில முஸ்லிம்கள் வீதியை மறித்து எதிர்ப்பு ஆர்ப்பாடத்தில் ஈடுபட்டமையை அடுத்து அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது.

தியாகதீபம் திலீபனின் 36 ஆண்டு நினைவேந்தலை ஒட்டி 15 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரையில் திலீபன் நினைவு நிகழ்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதன் ஒரு கட்டமாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தலைமையில் பொத்துவிலில் இருந்து யாழ் நல்லூர் திலீபன் பூங்கா வரையிலான அவரின் உருவப்படம் தாங்கிய வாகன ஊர்திப் பவனி நேற்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு பொத்துவில் நகரில் ஆரம்பிக்கப்பட்டது .

இந்த நினைவேந்தலில் வண பிதா சக்திவேல், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், கட்சியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ், சட்டத்தரணி காண்டீபன் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் கலந்துகொண்டு தியாகி திலீபனது உருவப்படத்தின் முன்னால் ஈகச் சுடர் ஏற்றி, மலர் மாலை அணிவித்து, மலர் தூவி, இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி, வாகன ஊர்தியை ஆரம்பித்து வைத்தனர்.

பொத்துவில் இருந்து திருக்கோவில் வரையுமுள்ள கோமாரி, ஊறணி, சங்கமம்கண்டி திருக்கோவில் வரையும் வீதிகளில் வாகன ஊர்திக்காக மக்கள் காத்திருந்தனர். அதனை வீதிகளில் மறித்து திருஉருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

இதனை தொடர்ந்து அங்கிருந்து கல்முனையை நோக்கி அக்கரைப்பற்றின் ஊடாக மாலை 5 மணியளவில் பயணித்த வாகன ஊர்தியை, அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு அருகாமையில் திடீரென எட்டுப் பத்துப் பேர் கொண்ட ஒரு முஸ்லிம் குழுவினர் சிங்க கொடியுடன் வழிமறித்தனர். “புலிகளின் மிருகத்தனமான சித்தாந்தங்களை எமது கிழக்கு மாகாண அமைதியான சமூகத்திற்கு பிரச்சாரம் செய்ய அனுமதிக்கமாட்டோம்“, “கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் சமூகத்திற்கு எதிராக புலிகளின் கொடூரக்கொலைகளை வன்மையாகக் கண்டிக்கின்றோம்“, “அக்கரைப்பற்று முஸ்லிம்களுக்கு எதிராக புலிகள் நடாத்திய அட்டூழிங்களுக்கு எதிராக விசாரணை நடாத்துமாறு சர்வதேசத்தையும் யு.என். எச்.சி.ஆரையும் வலியுறுத்துகின்றோம்” – என எழுதப்பட்ட சுலோகங்கள் ஏந்தியவாறு கோஷங்கள் எழுப்பியவாறு தூஷண வார்த்தைகள் பேசியவாறு சுமார் 5 நிமிடம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டது.

இதனையடுத்து அங்கு வாகன நெரிசல் ஏற்பட்டது. வாகன ஊர்தி அங்கு ஓரிரு நிமிடம் நிறுத்தி என்ன செய்வது என்ற நிலையில், வீதியின் அடுத்த பகுதியால் வாகன ஊர்தியை வாகன சாரதி செலுத்தியதையடுத்து ஆர்பாட்டகாரர்களால் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் அதன் பின்னால் சென்ற வாகன அணி பயணத்தை மேற்கொண்டு கல்முனை பாண்டிருப்பைச் சென்றடைந்தது.

அங்கு வீதியில் ஊர்திக்குக் காத்திருந்த மக்கள் ஊர்தியை மறித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். அம்பாறை மாவட்ட ஊர்திப் பவனியை முடிவுக்கு வந்தது. இன்று சனிக்கிழமை இரண்டம்நாள் களுவாஞ்சிக்குடியில் வாகன ஊர்தி ஆரம்பித்து மட்டக்களப்பு மாவட்டத்தில் பல பிரதேசங்களுக்கு சென்று அங்கிருந்து வாகரை ஊடாக திருகோணமலையை சென்றடையவுள்ளது.



# மணிப்பூரில் தொடரும் கலவரம்: இதுவரை 175 பேர் படுகொலை!

மணிப்பூரில் நான்கு மாதங்களாக தொடரும் இனக்கலவரத்தில் இதுவரை 175 பேர் கொல்லப்பட்டுள்ளனர். ஆயிரத்து 108 பேர் காயமடைந்துள்ளனர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும், இந்த கலவரத்தில் 32 பேர் காணாமல் போயுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

4 ஆயிரத்து 786 வீடுகள் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளன எனவும் 386 மதக் கட்டடங்கள் அழிக்கப்பட்டுள்ளன என்றும் பொலியார் குறிப்பிட்டுள்ளனர்.

காணாமற்போன ஆயுதங்களில் 1,359 துப்பாக்கிகள் மற்றும் பல்வேறு வகையான 15,050 வெடிபொருட்களை பொலிஸார் மீட்டுள்ளனர்.

வன்முறையில் உயிரிழந்த 175 பேரில் 9 பேர் இன்னும் அடையாளம் காணப்படவில்லை.

79 உடல்கள் உரிமை கோரப்பட்டுள்ளன எனவும் 96 உடல்கள் உரிமை கோரப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மின்தூக்கி அறுந்து விழுந்ததில் 4 பேர் பரிதாபமாக உயிரிழப்பு!



இந்தியாவின் – உத்தரபிரதேசத்தில் மின்தூக்கி அறுந்து விழுந்ததில் நான்கு பேர் உயிரிழந்துள்ளனர்.

உத்தரபிரதேச மாநிலம் நொய்டா பிஸ்ராக் கோட்வாலி பகுதியில் உள்ள ஒரு குடியிருப்பு வளாகத்தில் புதிதாக கட்டடம் கட்டும் பணி நடந்து வருகிறது.

நேற்று இந்த பணியில் ஈடுபட்ட தொழிலாளர்கள் கட்டுமான பொருட்களை மின்தூக்கியில் எடுத்து சென்றனர். அப்போது மின்தூக்கி திடீரென அறுந்து கீழே விழுந்தது.

இதில் மின்தூக்கியில் சென்ற 4 தொழிலாளர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்தனர்.

இது பற்றி அறிந்ததும் தீயணைப்பு படையினர் விரைந்து சென்று மீட்பு பணிகளில் ஈடுபட்டனர்.

படுகாயத்துடன் உயிருக்கு போராடிக்கொண்டிருந்த தொழிலாளர்களை மீட்டு சிகிச்சைக்காக வைத்திய சாலையில் அனுமதித்தனர்.

சம்பவம் நடந்த போது மின்தூக்கியில் 12 பேர் இருந்தனர் என்று கூறப்படுகின்றது.

அதிக பாரம் காரணமாக இந்த விபத்து இடம்பெற்றிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

# ஏ.ஆர்.ரஹ்மான் நிகழ்ச்சியால் சர்ச்சை!

இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான் நடத்திய இசை நிகழ்ச்சியில் எத்தனை அனுமதி சீட்டுகள் விற்கப்பட்டன என்பது குறித்த விவரங் களைத் தெரிவிக்குமாறு, நிகழ்ச்சியை நடத்திய நிறுவனத்துக்கு சென்னை மாநகராட்சி கடிதம் அனுப்பியுள்ளது.

ஏ.சி.டி.சி என்ற நிறுவனம் சார்பில் “மறக்குமா நெஞ்சம்” என்ற தலைப்பில், இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மானின் இசை நிகழ்ச்சி, சென்னை கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள பனையூரில் கடந்த 10 ஆம் திகதி நடைபெற்றது.

தனியாருக்குச் சொந்தமான இடத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை முறையாகச் செய்யவில்லை என்று குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

அந்த நிகழ்ச்சியில் பங்கேற்க ஆயிரக்கணக்கில் ரசிகர்கள் குவிந்ததால் அரங்கம் நிறைந்து, வெளியே ஏராளமானோர் காத்து நின்றனர்.

போதிய வாகன நிறுத்துமிட வசதிகள் ஏற்பாடு செய்யப்படாமையால் கிழக்கு கடற்கரை சாலையில் போக்குவரத்து முடங்கியது.

அத்துடன், வடக்கு நெம்மேலியில் நடை பெற்ற திருமண வரவேற்பு நிகழ்ச்சி யில் பங்கேற்று வீடு திரும்பிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் வாகனமும் நெரிசலில் சிக்கியமை குறிப்பிடத்தக்கது.

# சீனாவில் பாரம் தூக்கி விழுந்ததில் ஆறு பேர் உயிரிழந்துள்ளனர்!

சீனாவில் பாரம் தூக்கி சரிந்து விழுந்ததில் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

சீனாவின் ஜியான்யாங் மாகாணத்தில் உள்ள துவோ ஆற்றின் மீது பாலம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் இந்த பணிகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. அப்போது டவர் கிரேன் திடீரென சரிந்து விழுந்துள்ளது.

இதில் பாலம் கட்டுமான பணியில் ஈடுபட்டு கொண்டிருந்த 6 தொழிலாளர்கள் உடல் நசுங்கி உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும் 5 பேருக்கு படுகாயம் ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.



சம்பவத்தில் காயமடைநடதவர்கள் சிகிச்சைகளுக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# அரச சார்பற்ற நிறுவனங்கள் லிபியாவுக்கு நிவாரண உதவி!





லிபிய வெள்ள அனர்த்தம் ஏற்பட்டு ஐந்து நாட்கள் நிறைவடைந்த நிலையில், அரச சார்பற்ற நிறுவனங்கள் பாதிப்படைந்த மக்களுக்கு பல்வேறு நிவாரண உதவிகளை வழங்கி வருகின்றன.

இரண்டு நீர்ப்பாசன அணைக்கட்டுகள் திடீர் என உடைப்பெடுத்ததை அடுத்து டெர்னா நகரத்தில் பாரிய உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த நகரத்தில் மட்டும் 20 ஆயிரம் பேர் மரணித்திருக்கலாம் என தெரிவித்துள்ள நகர முதல்வர், ஆயிரக்கணக்கானவர்கள் வெள்ளத்தில் அடிபட்டு சென்றுள்ளனர் என குறிப்பிட்டுள்ளார்.

சில உடல்கள் கரையோரத்தில் இருந்து 60 மைல்களுக்கு அப்பால் இருந்தும் மீட்கப்பட்டுள்ளன.

வெள்ளத்தில் தப்பியவர்களின் கூற்றுப்படி, தங்களது கண்முன்னால் பெண்கள் குழந்தைகள் உட்பட ஏராள மானவர்கள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டதை அவதானித்தோம் என தெரிவித்துள்ளனர்.

வெள்ளம் குறித்த எச்சரிக்கை உரிய காலத்தில் மக்களின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தால் ஏராளமான உயிர்களை காப்பாற்றியிருக்கலாம் என ஐக்கிய நாடுகளின் காலநிலை நிறுவனம் தெரிவித்துள்ளது.

30 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் தங்களது வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர் என ஐக்கிய நாடுகளின் இடம் பெயர்விற்கான சர்வதேச அமைப்பு தெரிவித்துள்ளது.

மாசடைந்த நீரை மக்கள் பருக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதனால் தொற்று நோய்கள் துரிதமாக பரவலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தால் உயிரிழந்தவர்களின் சடலங்களை ஒரே புதைக்குழியில் அடக்கம் செய்ய வேண்டாம் என அரச அதிகாரிகளை உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் கோரியுள்ளன.

# ஈரான் மீது தொடர்ந்தும் அணு ஆயுத தடை!



ஈரான் மீது அணு ஆயுத தடைகளை தொடர்ந்தும் அமுலில் வைத்திருக்க பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகள் தீர்மானித்துள்ளன.

பிரித்தானிய, பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகள் ரஷ்யாவிற்கு ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகளை விற்பதை தடுக்கும் முயற்சியில் ஈரான் மீதான பொருளாதார தடைகளை விதித்துள்ளன. 2015 ஆம் ஆண்டில் ஈரான் அணுசக்தி ஒப்பந்தத்திற்கு ஒப்புக்கொண்ட நிலையில் அந்த விதிமுறைகளின் கீழ், சில தடைகள் அடுத்த மாதம் நீக்கப்படும்.

ஆனால் யுரேனியத்தை செறிவூட்டி சேமித்து வைத்ததன் மூலம் ஈரான் ஒப்பந்தத்தை மீறியதாக ஐரோப்பிய நாடுகள் குற்றம் சுமத்தி வருகிற நிலையில் இது ஆத்திரமூட்டல் நடவடிக்கை என ஈரான் தெரிவித்துள்ளது.

இருப்பினும் காலாவதியாகும் ஐ.நா.வின் தடைகளை தங்கள் சொந்த சட்டங்களில் இணைத்துக்கொள்வதாக பிரித்தானிய, பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகள் அறிவித்துள்ளன.

எவ்வாறாயினும் தடைகளுக்கு மத்தியிலும் ஈரானில் தயாரிக்கப்பட்ட பல ட்ரோன்கள் உக்ரைனுக்கு எதிரான போரில் ரஷ்யாவால் பயன்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

# யாழ். பல்கலையில் தியாகி திலீபனின் நினைவேந்தல்














# வீடமைப்பு கட்டுமமானக் கண்காட்சி யாழ்ப்பாணத்தில் நேற்று ஆரம்பம்

(எஸ்.நிதர்ஷன்)

"யாழ் வீடமைப்பு மற்றும் கட்டுமமானக் கண்காட்சி - 2023" எனும் தொனிப் பொருளிலான மூன்று நாள் கண்காட்சி யாழில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்பாகவுள்ள முற்றவெளி மைதானத்தில் நேற்றுக் காலை ஆரம்பித்து வகைக்கப்பட்ட இக்கண்காட்சி இன்றும் நாளையும் தொடர்ச்சியாக மூன்று நாள்கள் இடம்பெறவுள்ளது.

இக் கண்காட்சியை இலங்கைக் கட்டிட நிர்மாண கழகத்தின் சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி பொறியியளாளர் நிஷ்ங்க விஜேரத்தன விருந்தினராக கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

இந் நிகழ்வில் மூத்த தலைவர்கள், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.









# ரூ.3 கோடி 72 லட்சம் பெறுமதி நகைகளை கடத்த முயன்ற இரண்டு பெண்கள் சிக்கினர்

சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குத் தங்க நகைகளைக் கடத்த முயன்ற இரு பெண்களை பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகள் குழுவினர் கட்டுநாக்க விமானநிலையத்தில் வைத்து நேற்று வெள்ளிக்கிழமை கைதுசெய்தனர்.

இந்தப் பெண்களிடமிருந்து 3 கோடியே 72 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.



இவர்களில் ஒருவர் 26 வயதான இந்தியப் பிரஜையாவார். மற்றைய பெண் கொழும்பு ஜம்பட்டா வீதியைச் சேர்ந்த 34 வயதுடைய இலங்கைப் பிரஜையாவார்.

கைதுசெய்யப்பட்ட இரண்டு பெண்களும் மேலதிக விசாரணைகளுக்காகபொலிஸ்போதைப் பொருள் திணைக்கள அதிகாரிகளினால் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# மணல், கால்நடைகள் கடத்தலை கட்டுப்படுத்த டக்ளஸ் உத்தரவு



யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் மணல் கடத்தல்,கால்நடைகள் கடத்தல் மற்றும் ஏனைய சட்டவிரத செயற்பாடுகளை கட்டுப்படுத்து மாறு கடற்தொழில் அமைச்சர் டக்லஸ் தேவானந்தா உத்தரவிட்டுள்ளார்

யாழ்குடா நாட்டில் அண்மைய நாள்களில் இடம்பெற்று வரும் சட்டவிரோத மணல் கடத்தல் கால்நடைகள் கடத்தல் ஏனைய சட்டவிரோத சம்பவங்கள் தொடர்பாக ஆராயும் விசேட கூட்டம் யாழ் மாவட்ட செயலகத்தில் கடற்தொழில் அமைச்சர் தலைமையில் இடம்பெற்றது.

இராணுவ மற்றும் பொலிஸ் உள்ளிட்ட அரச உயர் அதிகாரிகளின் கூட்டத்தில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

யாழ் மாவட்ட அரச அதிபரின் அலுவலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் யாழ்ப்பாணம் மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர், யாழ் மாவட்ட இராணுவக் கட்டளை தளபதியின் பிரதிநிதி, பிரதேச செயலர்கள், பொலிஸ் உயர் அதிகாரிகள்,பொது சுகாதார பரிசோதகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்,

# பொலிஸ் நிலையங்கள் மீளக் கண்காணிப்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை




நாடளாவிய ரீதியில் பொலிஸ் நிலையங்களைக் கண்காணிக்கும் நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த மூன்று வருடங்களாக கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை என அதன் ஆணையாளர் சட்டத்தரணி நிமல் புஞ்சி ஹேவா தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக பொலிஸாருக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகள் அதிகரித்து வருகின்றன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த கண்காணிப்பின் போது சந்தேக நபர்களை கைது செய்யும் வழிமுறைகள் மற்றும் கைதிகள் சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்படுகின்றமை தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

# 21 மாணவர்கள் விபத்தில் காயம்




பாதுக்க – துன்னான பகுதியில் இடம்பெற்ற பஸ் விபத்தில் காயமுற்ற 21 பாடசாலை மாணவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நாராம்மல பகுதியிலிருந்து பாடசாலை மாணவர்களுடன் ஹோமாகம நோக்கி பயணித்த பஸ் ஒன்றுடன் பின்னால் சென்ற பஸ் மோதுண்டமையினால் இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளது.

இந்த விபத்தில் பாடசாலை மாணவர்கள் 21 பேரும் ஆசிரியை ஒருவரும் காயமடைந்த நிலையில் பாதுக்க வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பஸ் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளமையுடன் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

# மந்துவில் படுகொலைகளின் 24 ஆம் ஆண்டு நினைவேந்தல்









மந்துவில் படுகொலையின் 24ஆம் ஆண்டு நினைவு தின நிகழ்வு முல்லைத்தீவில் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு தாய் தமிழ் நினைவேந்தல் அமைப்பின் ஒழுங்கு அமைப்பில் புதுக்குடியிருப்புப் பகுதியில் நேற்று நடத்தப்பட்டது.

புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட மந்துவில் பகுதியில் கடந்த 1999 ஆம் ஆண்டு இலங்கை விமானப் படையினர் நடத்திய மிலேச்சத்தனமான குண்டு வீச்சுத் தாக்குதலில் 24 பொதுமக்கள் உயிரிழந்தனர்.

அவர்களின் நினைவாக மந்துவில் சந்திப் பகுதியில் சிறப்பாக அமைக்கப்பட்ட – உருவப் படங்கள் வைக்கப்பட்ட – பந்தலில் நிகழ்வுகள் சிறப்புடன் நடைபெற்றன.

பொதுச் சுடரை உயிரிழந்தவர்களின் உறவினர்கள் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து 24 பேரின் உருவப்படங்களுக்கு அவர்களின் உறவினர்கள் மாலை அணிவித்து மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

தாய்த் தமிழ் பேரவையின் இணைப்பாளர் நவநீதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தாய் தமிழ் பேரவையின் ஒருங்கிணைப்பாளர் சா.ரூபன், வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன், புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ச.குகனேசன் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# நல்லூர்த் திருவிழாவில் காணாமல் போன சிறுமி

(எஸ்.நிதர்ஷன்)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தன் ஆலய திருவிழாவில் சிறுமி ஒருவர் காணாமல் போயுள்ளார் என யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் திருவிழாவில் கலந்து கொண்டிருந்த பிருத்தி அஸ்விகா எனும் இரண்டு வயது சிறுமியே காணாமல் போயுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தீர்த்த திருவிழாவான நேற்று முன்தினமே இந்தச் சிறுமி காணாமல் போயுள்ளார் எனவும் சிறுமியை மீட்டுத் தருமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வவுனியாவை சொந்த இடமாக கொண்ட இந்தச் சிறுமி ஆலயத்தில் காணாமல் போயுள்ளமையால் அவரை எங்காவது கண்டவர்கள் உடனடியாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்குமாறும் பொலிஸார் கேட்டுள்ளனர்.






## 'ஏ.எம்.எம்.றஸீன் கோச்" ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணக் கிரிக்கெட்

# சம்பியனானது நிந்தவூர் ஹிக்மா!

(பௌசுல் றிபாஸ்)

தமிழ் லெட்டர் மற்றும் களம் பெஸ்ட் ஒருங்கிணைப்பில் லக்கி விளையாட்டுக் கழகம் நடாத்திய "ஏ.எம்.எம்.றஸீன் கோச்" ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் சம்பியனாக நிந்தவூர் ஹிக்மா விளையாட்டுக்கழகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இறுதிப்போட்டி நிகழ்வுகள் அண்மையில், லக்கி விளையாட்டுக் கழகத் தலைவரும் சிரேஸ்ட ஊடகவியலாளருமான எஸ்.எம்.அறூஸ் தலைமையில் அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதனத்தில் மின்னொளியில் இடம்பெற்றது.

அணிக்கு 8 பேர் கொண்ட 5 ஓவர்கள் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியாக அமைந்திருந்த இத்தொடரில், அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 60 கழகங்கள் பங்குபற்றியிருந்தன.

இறுதிப் போட்டிக்கு நிந்தவூர் ஹிக்மா விளையாட்டுக் கழகமும், அக்கரைப்பற்று பள்ளிக்குடியிருப்பு போய்ஸ் விளையாட்டுக்கழகமும் தெரிவு செய்யப்பட்டிருந்தன.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய அக்கரைப்பற்று பள்ளிக்குடியிருப்பு போய்ஸ் அணியினர் 5 ஓவர்கள் முடிவில் 5 விக்கட்டுக்களை இழந்து 53 ஓட்டங்களைச் சேர்த்தனர். அணி சார்பாக சபீல் 15 ஓட்டங்களையும், சாக்கீர் 12 ஓட்டங்களையும் கூடுதலாகப் பெற்றனர்.

வெற்றியிலக்கான 54 ஓட்டங்களை நோக்கிப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நிந்தவூர் ஹிக்மா அணியினர், 4.1 ஓவர்களில் இரண்டு விக்கட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை எட்டி வெற்றியைத் தமதாக்கினர்.

அந்த அணி சார்பாக துடுப்பாட்டத்தில் நிக்ஸி அஹமட் அதிரடியாக விளையாடி ஆறு சிக்ஸர்கள் அடங்கலாக 36 ஓட்டங்களைச் சேர்த்தார்.

சம்பியனான ஹிக்மா அணியினருக்கு 50 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டது. இரண்டாமிடம் பெற்ற அக்கரைப்பற்று பள்ளிக்குடியிருப்பு போய்ஸ் அணியினருக்கு கிண்ணத்துடன் 25 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டது.

இந்த இறுதியாட்ட நிகழ்வில், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக கிழக்கின் கேடயம் அமைப்பின் பிரதான ஒருங்கிணைப்பாளர் எஸ்.எம்.சபீஸ், அனீஸ் மோல் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஏ.சீ.அனீஸ், நாடாளுமன்றஉறுப்பினர்எஸ்.எம்.எம்.முசாரபின், ஒலுவில் பிரதேச இணைப்பாளர் எம்.ஜே.எம்.அஸ்ஹர், அட்டாளைச்சேனை ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் தலைவர் சட்டத்தரணி எம்.எஸ்.ஜுனைதீன், சமுர்த்தி முகாமையாளர் றியாத் அப்துல் மஜீத், தமிழ் லெட்டர் நிறுவுநர் ஏ.எல்.றமீஸ், களம் பெஸ்ட் முகாமைத்துவப் பணிப்பாளர் யு.எல்.சிப்லியா அறூஸ், லக்கி விளையாட்டுக் கழகச் செயலாளர் ஏ.எல். கியாஸ்தீன், அக்கரைப்பற்று பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் ராசீக், பெப்பில்ஸ் கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் இன்சாப், உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.








# இன்றைய ராசி பலன்கள் - 16.09.2023




முதியவர்கள் தங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும். விரைவாக பணம் சம்பாதிக்கும் ஆசை இருக்கும். சமையலறைக்கு அவசியமான பொருட்களை வாங்குவதில் மாலையில் வேலையாக இருப்பீர்கள். உங்கள் அன்புக்கு உரியவரிடம் இருந்து அழைப்பு வரும் என்பதால் அருமையான நாள். பயணம் ஆனந்த மயமானதாக அதிக பயன் தருவதாக இருக்கும். நீங்களும் உங்கள் துணையும் உங்கள் திருமண வாழ்க்கையிலேயே மிக சிறந்த நாளாக இந்த நாளை நினைவில் கொள்வீர்கள். வாழ்க்கையின் பிரச்சினைகளுக்கு நீங்களே ஒரு தீர்வைக் கண்டுபிடிக்க வேண்டும், ஏனென்றால் மக்கள் உங்களுக்கு அறிவுரைகளை வழங்க முடியும், வேறு ஒன்றும் இல்லை.




அதிகம் சாப்பிடுவதைத் தவிர்த்திடுங்கள். உங்கள் எடையில் கவனமாக இருங்கள். பழங்கால பொருட்கள் மற்றும் நகைகளில் செய்யும் முதலீடு லாபத்தையும் வளத்தையும் கொண்டு வரும். உறவினர்கள் மற்றும் நண்பர்களிடம் இருந்து எதிர்பாராத பரிசுகளும் அன்பளிப்புகளும் வரும். சிலர் உங்களிடம் காதலை தெரிவிக்கும் வாய்ப்புகள் உள்ளன. நீங்கள் கேட்க எப்போதும் விரும்பியவாறு மற்றவர்கள் இன்று பாராட்டு மழை பொழிவார்கள். உங்கள் துணையின் மிக காதலின் மறுபக்கத்தை இன்று காண்பீர்கள்.

இன்று நீங்கள் இது வரை உங்கள் வாழ்க்கையில் அனுபவித்த அத்தனை கஷ்டங்களையும் உங்கள் துணையின் அன்பில் மறப்பீர்கள்.




வெளிப்படையான பயமற்ற கருத்துகள் உங்கள் நண்பரின் தற்பெருமையை காயப்படுத்தும். உங்களுடைய பக்கத்து வீட்டுக்காரர் இன்று உங்களிடம் கடன் கேட்கலாம், கடன் வழங்குவதற்கு முன் அவர்களின் நம்பகத்தன்மையை சரிபார்க்க அறிவுறுத்தப்படுகிறீர்கள், இல்லையெனில் பணம் இழக்கப்படலாம். உறவினர்கள் வருகை, நீங்கள் நினைத்ததைவிட நல்லதாக இருக்கும். உங்கள் காதலர் அளவுக்கு மீறி புகழக் கூடும் – இந்த உலகில் என்னை தனியாக விட்டுவிடாதே என்று – கவனமாக இருங்கள். உங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கோ அல்லது உங்கள் நண்பர்களுக்கோ உங்களுக்கு நேரம் இல்லை என்று நீங்கள் உணரும்போது, நீங்கள் வருத்தப்படுவீர்கள். இன்றும் உங்கள் மனநிலை அப்படியே இருக்க முடியும்.




சுற்றியுள்ளவர்கள் அதிகம் எதிர்பார்ப்பதை உணர்வீர்கள். உங்களால் இயலக் கூடியதற்கு அதிகமாக வாக்குறுதி கொடுக்காதீர்கள். மற்றவர்களை மகிழ்விப்பதற்காக நீங்கள் அதிகம் உழைக்காதீர்கள். உங்கள் முந்தைய கடனை இதுவரை திருப்பித் தராத உங்கள் உறவினர்களுக்கு இன்று நீங்கள் கடன் கொடுக்கக்கூடாது. புதுமனை புகுவிழாவுக்கு உகந்த நாள். துணை மீது சரியாகக் கவனம் செலுத்தாவிட்டால் அவர் குழப்பமடைவார். சில சட்ட ஆலோசனைகள் பெறுவதற்கு ஒரு வழக்கறிஞரை சந்திக்க நல்ல நாள். மனிதர்களின் உலகம் எண்ணங்களால் உருவாக்கப்படுகிறது. ஒரு சிறந்த புத்தகத்தைப் படிப்பதன் மூலம் உங்கள் சித்தாந்தத்தை பலப்படுத்த முடியும்.




புன்னகைத்திடுங்கள், அதுதான் உங்களின் எல்லா பிரச்சினைகளுக்கும் மருந்து. கூட்டு முயற்சிகளிலும் சந்தேகமான நிதி திட்டங்களிலும் ஈடுபடாதீர்கள். குடும்பத்தினரின் உணர்வு–களைக் காயப்படுத்தாமல் இருக்க கோபத்தைக் கட்டுப்படுத்துங்கள். மகிழ்ச்சிக்காக புதிய உறவுகளை உருவாக்கப் பாருங்கள். இன்று நீங்கள் உங்கள் ஓய்வு நேரத்தை மத வேலைகளில் செலவிடலாம் என்ற எண்ணத்தை உருவாக்கலாம். இதன் போது, நீங்கள் தேவையற்ற விவாதங்களில் விழக்கூடாது. உங்கள் துணையுடன் காதல் செய்ய இன்று இனிமையான நாள். இன்று உங்கள் தாயுடன் நல்ல நேரம் செலவிடுவீர்கள், அவர்கள் இன்று உங்கள் குழந்தைப் பருவத்தின் விடயங்களை பகிர்ந்து கொள்வார்கள்.




உங்கள் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் விஷயங்களைச் செய்தால் பலன் கிடைக்கக் கூடிய நாள். உங்கள் நண்பர்களின் உதவியால் நிதிப் பிரச்சினை தீர்ந்துவிடும். குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுக்கு செலவு செய்வதில் ஆனந்தம் கொள்வீர்கள். காதல்வசமாகும் சிக்கல் எழுந்து மகிழ்ச்சிக்கு கூடுதல் சுவை சேர்க்கும். நேரத்தின் பலவீனத்தை உணர்ந்து, இன்று நீங்கள் எல்லோரிடமிருந்தும் தூரத்தை வைத்திருப்பதன் மூலம் தனிமையில் நேரத்தை செலவிட விரும்புகிறீர்கள். அவ்வாறு செய்வதும் உங்களுக்கு நன்மை பயக்கும். இன்று முழுவதும் உங்கள் துணை சிறந்த உற்சாகம் மற்றும் காதலுடன் இருப்பார். மன அமைதி மிகவும் முக்கியமானது – இதற்காக நீங்கள் எந்தத் தோட்டம், ஆற்றங்கரை அல்லது கோவிலுக்கு செல்லலாம்.




சீக்கிரம் அலுவலகத்தை விட்டு வெளியே சென்று உண்மையில் நீங்கள் ஆனந்தப்படும் செயல்களைச் செய்யுங்கள். உங்கள் தந்தையிடமிருந்து எந்தவொரு ஆலோசனையும் இன்று தொழில் துறையில் உங்களுக்கு பயனளிக்கும். பழைய நண்பர் ஒருவர் உங்களுக்கு சில பிரச்சினைகளை ஏற்படுத்தலாம். இன்று உங்கள் துணை உங்களை மிகவும் தேடச் செய்வார். ஓர் அருமையான அதிர்ச்சி செய்து அவர்களது நாளை இனிமையாக்குங்கள். நீங்கள் திருமணமாகி குழந்தைகளைப் பெற்றிருந்தால், அவர்கள் உங்களுக்கு போதுமான நேரம் கொடுக்க முடியாததால் அவர்கள் இன்று உங்களிடம் முறையிடலாம். திருமணங்கள் ஏன் சொர்கத்தில் நிச்சயிக்கப்படுகிறதென்று இன்று நீங்கள் உணர்வுபூர்வமாக தெரிந்துகொள்வீர்கள்.




உங்கள் மகிழ்ச்சிக்கு பய உணர்ச்சி ஊறாக இருக்கும். நம் சொந்த எண்ணங்கள் மற்றும் கற்பனைகளின் பலன் தான் அது என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அது உடனடியாக உங்களைக் கொல்கிறது. வாழ்வில் ஆனந்தத்தை கெடுத்து திறமையை பாதிக்கிறது. எனவே உங்களை கோழையாக ஆக்கிவிடுவதற்கு முன்பு, முளையிலேயே கிள்ளிவிடுங்கள். பல்வேறு வழிகளில் பண வரவு இருக்கும். கற்பனைகளில் வேகம் காட்டாதீர்கள். யதார்த்தமாக இருக்க முயற்சி செய்யுங்கள். நண்பர்களுடன் சிறிது நேரம் செலவிடுங்கள். அது உங்களுக்கு நல்லதை செய்யும். காதலிப்பவர் காதல் உணர்வில் இருப்பார். இன்று நீங்கள் இலவச நேரத்தைப் பயன்படுத்துவீர்கள், கடந்த காலத்தில் முடிக்கப்படாத படைப்புகளை முடிக்க முயற்சிப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் -16.09.2023




உங்கள் ஆரோக்கியத்தில் அக்கறை எடுத்துக் கொள்ளுங்கள். நாளின் பிற்பகுதியில் பண நிலைமை மேம்படும். இன்றைக்கு பிள்ளைகள் மற்றும் குடும்பத்தின் மீதுதான் கவனம் தேவை. கண்கள் பொய் சொல்வதில்லை. இன்று உங்கள் இணையின் கண்கள் ஒரு சிறப்பான விடயத்தை உங்களுக்குச் சொல்லக் காத்திருக்கிறது. பிறருக்கு உதவி செய்வதில் உங்கள் நேரத்தையும் சக்தியையும் செலவிடுங்கள். உங்களுக்கு சம்பந்தமில்லாத விடயங்களில் ஈடுபாடு காட்டாதீர்கள். திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன. உங்கள் வாழ்க்கை துணை அதனை இன்று உறுதிப்படுத்துவார். இன்று நீங்கள் ஒரு சிக்கலில் சிக்கலாம் மற்றும் ஒரு நல்ல நண்பர் வாழ்க்கையில் இருப்பது மிக முக்கியம் என்பதை. நீங்கள் புரிந்து கொள்வீர்கள்.




மாலையில் நண்பர்களுடன் இருப்பது ஆனந்தமானது. ஆனால் அதிகமான சாப்பாடு மற்றும் பானங்களில் கவனமாக இருக்கவும். பணம் உங்களுக்கு முக்கியம், ஆனால் உங்கள் உறவுகளைக் கெடுக்கும் அளவுக்கு பணத்தைப் பற்றி அவ்வளவு தீவிரமாக இருக்க வேண்டாம். நண்பர்களும் உறவினர்களும் அதிக கவனத்தை எதிர்பார்ப்பார்கள். ஆனால் வெளி உலகுக்கு கதவுகளை சாத்தி விட்டு உங்களையே ராஜாபோல நடத்திக் கொள்ள இதுவே சரியான நேரம். காதலருடன் இன்று வெளியில் செல்வதாக இருந்தால், சர்ச்சையான பிரச்சினைகளை எழுப்புவதைத் தவிர்த்திடுங்கள். உங்கள் நகைச்சுவை உணர்வுதான் மிகப் பெரிய சொத்து. உங்களுடன் நேரம் செலவழிக்க முடியாத வகையில் உங்கள் துணை இன்று இருக்கக்கூடும்.




நீண்டகால நோயை எதிர்த்துப் போராடும்போது தன்னம்பிக்கைதான் முக்கிய சாராம்சம் என்பதை உணர்ந்திடுங்கள். அவசரத்தில் முதலீடு செய்யாதீர்கள். எல்லாக் கோணங்களிலும் ஆராயாவிட்டால் நஷ்டம் நிச்சயம். மனைவியுடன் தகராறு செய்வது மனதை குழப்பமாக்கும். தேவையில்லாமல் அழுத்தத்துக்கு ஆளாக வேண்டாம். நம்மால் மாற்ற முயாதவற்றை ஏற்றுக்கொள்ளக் கற்றுக் கொள்வதே வாழ்க்கையில் நல்ல பாடமாகும். உங்கள் மனதில் வேலை குறித்த எண்ணம் ஆக்கிரமித்திருந்தாலும் உங்களுடைய அன்புக்குரியவர் அதீதமான காதல் ஆனந்தத்தைத் தருவார். நீங்கள் கேட்க எப்போதும் விரும்பியவாறு மற்றவர்கள் இன்று பாராட்டு மழை பொழிவார்கள்.




உங்கள் உடல் தகுதியை பராமரிக்கக் கூடிய வகையில் விளையாட்டுகளில் நீங்கள் உற்சாகமாக இருக்கும் வாய்ப்பு உள்ளது. உங்களின் முதலீடுகள் மற்றும் எதிர்கால லட்சியங்களை ரகசியமாக வைத்திருங்கள். சிலர் தங்களால் செய்ய முடிவதற்கும் மேலாக வாக்குறுதி தருவார்கள். வெறுமனே பேசிவிட்டு பெறுபேற்றைக் காட்டாதவர்களை மறந்துவிடுங்கள். காதலி இன்று உங்களிடமிருந்து எதையும் கோரிக்கையாக வைக்கலாம், ஆனால் நீங்கள் அதை நிறைவேற்ற முடியாது. இதன் காரணமாக உங்கள் காதலி உங்களிடம் கோபப்படலாம். உங்கள் ஆளுமை என்னவென்றால், அதிகமானவர்களைச் சந்திப்பதன் மூலம் நீங்கள் வருத்தப்படுவீர்கள், பின்னர் உங்களுக்காக நேரத்தைக் ஒதுக்க முயற்சி செய்யுங்கள். இந்த நேரத்தில், இன்று உங்களுக்கு ஒரு சிறந்த நாளாக இருக்கும்.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES | 235+ CONDO PROJECTS | 3500+ CONDO UNITS
KELSEY HOMES 40 Years Housing Excellence



S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS



CENTRALPARK JA-ELA
CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotiline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

PCP Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park